செய்தி வெளியீடு எண்.980 நாள்.**13.11.2008**

## ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' மூலம் பெற்ற கடன் முழுவதும் இரத்து!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை.

**2008–2009–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட விவசாயக் கடன்கள் இரத்து செய்யப்பட்டதைப் போன்றே, ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்திடமிருந்து பெற்று நிலுவையில் உள்ள விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பினையொட்டி, ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்துள்ள பணிகளுக்காகவும்; விவசாய நிலத்தை உழுவதற்கான இயந்திரம், விவசாயப் பண்ணை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, துளையிடும் இயந்திரம் போன்ற விவசாயத் திட்டங்களுக்காகவும் ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை 3 கோடியே 47 இலட்சம் ரூபாய்; கடன் தொகை மீதான வட்டி 59 இலட்சம் ரூபாய்; அபராத வட்டி 1 கோடியே 19 இலட்சம் ரூபாய் – ஆக மொத்தம் 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் முழுவதையும் ஆதிதிராவிட விவசாயிகளின் நலன் கருதி இரத்து செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.